இன்றைய செய்தி நாளைய வரலாறு


கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 82 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 14 – வியாழக்கிழமை 31 அக்டோபர் 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 82 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 14 - Thursday 31 October 2024 - Madurai 8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2024) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117–வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின் போது, அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், திருமதி பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம.கருமாணிக்கம் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2024) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117–வது பிறந்த நாளையொட்டி மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, திருமதி. பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா மற்றும் பொன்.முத்துராம லிங்கம், மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி, மு.மணிமாறன், காதர் பாட்சா முத்துராமலிங்கம் உள்பட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## தியாகிகளை எப்போதும் போற்றிடும் ‘திராவிட மாடல்’ அரசு!

# தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்க்கும் திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றுவோம்!

## பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் புகழஞ்சலி செலுத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் உறுதி!

**இராமநாதபுரம் , அக். 31 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2024) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117-வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-**

இந்திய விடுதலைப் போருக்காக தன்னையே ஒப்படைத்துக்கொண்டு உழைத்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் அவர்களின் நினைவிடத்தில் இன்றையதினம் நான் மரியாதை செலுத்தியிருக்கிறேன்.

இந்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் தேவர் திருமகனார் அவர்களைப் பற்றி பெருமைப்படுத்தி குறிப்பிட்டுச் சொன்னதை நான் சொல்ல விரும்புகிறேன்.

**தேவர் திருமகனாரைப் புகழ்ந்த அண்ணாவும், கலைஞரும்!**

“அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் போன்று, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்”என்று பேரறிஞர் அண்ணா அவரைப் பாராட்டியிருக்கிறார்.

“வீரராக பிறந்தார்; வீரராக வாழ்ந்தார்; வீரராக மறைந்தார்; மறைவுக்குப் பிறகும் வீரராக போற்றப்படுகிறார்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் அவரைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார். அத்தகைய தியாகியைப் போற்றும் அரசாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

**கழக அரசு பசும்பொன் தேவருக்கு சேர்த்த பெருமைகள்!**

பசும்பொன்தேவர் அவர்களை போற்றி கழக அரசு செய்திருக்கக்கூடிய பல்வேறு செயல்பாடுகளில் சிலவற்றை நான் உங்களிடத்தில் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன்.

**தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்த்த திட்டங்கள்!**

❖ மதுரை மாநகரில் மாபெரும் வெண்கலச் சிலை

❖ பசும்பொன் மண்ணில் நினைவில்லம்

❖ மேல்நீலிதநல்லூர், கமுதி, உசிலம் பட்டி ஆகிய இடங்களில் மூன்று அரசு கலைக் கல்லூரிகள்

❖ மதுரை ஆண்டாள்புரத்தில், “முத்துராமலிங்கத் தேவர் பாலம்” என்று பெயரிட்டோம்

❖ காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் கல்வி அறக்கட்டளை

❖ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினருக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் 20 விழுக்காடு ஒதுக்கீடு.

❖ கடந்த 2007ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவை மிக எழுச்சியோடு நாம் கொண்டாடியிருக்கிறோம்.

❖ அப்போது, திருமகனார் வாழ்ந்த இல்லம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விழாவை அடையாளம் காட்டக்கூடிய வகையில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. அணையா விளக்கும் நாம் அமைத்திருக்கிறோம்.

**தொடர்ச்சி 3–ஆம் பக்கம்**

## மதுரையில் கனமழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு!

# செல்லூர் கண்மாயிலிருந்து நீர் வெளியேற ரூ.11.9 கோடியில் பணிகள்!

## ஆய்வுக்குப் பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**மதுரை, அக். 31 -**

**மதுரையில் வெள்ள பாதிப்பு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தி செல்லூர் கண்மாயிலிருந்து நீர் வெளியேற 11.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் உடனடியாக மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் தேவர் திருமகனார் ஜெயந்தியை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2024) நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

அதன்பின்னர் மதுரை வந்த முதலமைச்சர் அவர்கள், வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாவட்ட ஆட்சியர், மதுரை மாநகராட்சி ஆணையர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் மதுரையில் வெள்ள பாதிப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது மதுரையில் பெருமழையால் பாதிக்கப்பட்ட செல்லூர் பகுதி மீண்டும் அவ்வாறு நேராதிருக்க உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணியாக 290 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கால்வாய் அமைக்க வேண்டியதன் தேவை குறித்து முதலமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் செல்லூர் கால்வாயிலிருந்து நீர் வெளியேறுவதற்கு சிமெண்ட் கால்வாய் 11.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட உத்தரவிட்டார். இதன்மூலம் இப்பகுதி மக்கள் பெரிதும் பயனடைவர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.10.2024) மதுரையில், 25.10.2024 மற்றும் 26.10.2024 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்ட நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் குறித்த காணொலியை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, மதுரை மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.